ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2092/2 - 2018 ඔක්තෝබර් මස 08 වැනි සඳුදා - 2018.10.08

*2092/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

*ச.வ.பி 3/2006*

***2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்***

*2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 23ஆம் பிரிவின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறினால் ஆக்கப்பட்டவிதிகள்.*

*நிதிசார் உளவறிதற் கூறு.*

*கொழும்பு.*

*விதிகள்*

*2016 ஆம் ஆண்டு சனவரி 27 ஆந் திகதிய 1951/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன) விதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1) அதன் 68 ஆம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

*‘68. ஒவ்வொரு நிதி நிறுவனமும், தந்திக் கைமாற்றல்களைச் செய்முறைப்படுத்துவதில், பயங்கரவாதத்துடனும் பயங்கரவாத நிதியளிப்புடனும், பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களின் உற்பத்திப் பெருக்கத்துடனும் அதனது நிதியளிப்புடனும் தொடர்புபட்ட அல்லது வேறு ஏதேனும் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானத்துக்குப் பயன் கொடுக்கும் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட வேறு ஏதேனும் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி இலக்குமயப்படுத்தப்பட்ட நிதியைத் தடை செய்தலின் மீது ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களுக்குப் பயன்கொடுக்கும் 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது உருவகங்களின் பணிப்பின் சார்பில் அல்லது பணிப்பின் கீழ் அல்லது அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் நன்மைக்காக செயலாற்றுகின்ற வேறு எவரேனுமாள் அல்லது உருவகம் உறைவிக்கும் நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் என்பதுடன் பெயர் குறிக்கப்பட்ட ஆட்களுடனும் உருவகங்களுடனும் கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்துதல் பற்றிய தடைகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.*

1A - G 28681 — 08 (2018/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன் 95 ஆம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

'95. ஒவ்வொரு நிதி நிறுவனமும் பயங்கரவாதத்துடனும் பயங்கரவாத நிதியளிப்புடனும், பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களின் உற்பத்திப் பெருக்கத்துடனும் அதனது நிதியளிப்புடனும் தொடர்புபட்ட இலக்குமயப்படுத்தப்பட்ட நிதியைத் தடை செய்தல் மீது ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட நிரல் தொடர்பில் அல்லது அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது உருவங்களின் பணிப்பின் சார்பில் அல்லது பணிப்பின்கீழ் அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் நன்மைக்காக செயலாற்றுகின்ற வாடிக்கையாளராக வரவுள்ளவர் அல்லது பயன்பெறுநர் 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் ஏதேனும் நிரலின் மீது அத்தகைய வாடிக்கையாளராக வரவுள்ளவரின் அல்லது பயன்பெறுநரின் பெயர் காணப்படுகின்றதா என்பதைச் சரிபார்த்தல் வேண்டும்.

*10-1236*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.